நாள்- 01.08.2023

Case No. OS.253/2014 (PW1 Cross continuation)

PW.1 - கணேசன்–பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வா.சா.ஆ.14 ல் உள்ள சொத்துக்கள் என் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.15 ல் பிரதிவாதி பெயரில் தனிகிரையம் பெற்ற சொத்துக்கள் என்றால் நான் வாங்கி என் தம்பி பெயரில் கிரையம் பெற்ற பத்திரம். வா.சா.ஆ.15 நான் என் தம்பி பெயரில்தான் வாங்கியதாக வாசகத்தில் உள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதி அவருடைய பெயரில் வாங்கிய தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. அனைத்து சொத்துக்களும் கூட்டுக்குடும்பத்தில் வாங்கிய சொத்துக்கள் ஆகும். நானும், என் அம்மாவும் சேர்ந்துதான் பிரதிவாதி என் தம்பி பெயரில் சொத்து வாங்கினோம் அவருக்கு தனிப்பட்ட முறையில் சொத்து எதுவும் கிடையாது. நான் 37 வருடமாக குடும்பத்திலிருந்து தனியாக இருக்கிறேன் என்றும் குடும்பத்திற்காக பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் அதன்மூலம் சொத்து எதுவும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் 2005 வரை நான் என் அம்மாவுடன் பூண்டியில் இருந்துதான் சொத்துக்கள் வாங்கி என் அம்மா பெயரிலும், என் தம்பி பெயரிலும் கிரையம் வாங்கப்பட்டது. மேற்கண்ட விவரங்கள் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியிருக்கிறேன். வா.சா.ஆ.16 ல் உள்ள சொத்துக்கள் பூண்டி கிராமத்தில் 12 ஏக்கர் நிலம் உள்ளது. நான் பணம் கொடுத்து சொத்துக்கள் வாங்காததால் அந்த சொத்துக்கள் என்னவென்று சொல்ல இயலவில்லை என்றால் நான் அந்த சொத்துக்களை பணம் கொடுத்து வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.17 ஆவணத்தில் பூண்டியில் என் தம்பி பிரதிவாதி பெயரிலுள்ள இரண்டு மனைகட்டுகள். சாட்சி மீண்டும் வா.சா.ஆ.17 ல் ஒரு மனைக்கட்டுதான் உள்ளது என்று சொல்கிறார். பிரதிவாதி பெயரிலுள்ள உள்ள சொத்துக்கள் அவர் தனிப்பட்ட முறையில் வாங்கிய சொத்துக்கள் என்றால் சரியல்ல. நானும், என் அம்மாவும் வாங்கிய சொத்துக்கள் ஆகும். என் தம்பி பொறுப்பாக இருப்பார் என்று அவர் பெயரில் வாங்கிய சொத்துக்கள் ஆகும். நான் விவசாயம் செய்து வந்த நிலத்திற்கு வரிரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் நான் அதற்கான பணத்தை என் தம்பியிடம் கொடுத்தேன் அவர் வரி செலுத்தினார். அதனால் வரிரசீது தாக்கல் செய்யவில்லை. இந்த விவரங்களை நான் எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை. திருத்தப்பட்ட பிராதில் 35 முதல் 38 அயிட்ட சொத்துக்களை பற்றி சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியுள்ளேன். அந்த சொத்தை யாரால் எப்போது எப்படி வாங்கப்பட்டது என்று சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த சொத்துக்கும், கூட்டுக்குடும்ப சொத்துக்கும் எந்தவிதமான சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் மனைவி 2006 ல் ஊராட்சிமன்ற தலைவராக இருந்தார் என்றால் சரிதான். அதனால் கான்ட்ராக்ட் வேலை செய்து பிரதிவாதி சம்பாதித்தார் என்று சொன்னால் கான்ட்ராக்ட் வேலை செய்யவில்லை, அதிலிருந்து பணமும்

ஈட்டிவரவில்லை, அவரது மனைவி பதவியில் மட்டும்தான் இருந்தார் வருமானம் எதுவும் கிடையாது. அயிட்டம் 1 முதல் 17 வரையிலான நிலங்கள் ஏரிக்கு கீழிரிக்கும் நீர்பிடிப்பு நிலங்கள் என்று சொன்னால் சரியல்ல. அந்த நிலங்களுக்கு விலைச்சல் கிடையாது என்றும் மழைவரும்போது வெள்ளத்தில் நிலத்தில் மூழ்கிவிடும் அதனால் நிலங்களிலிருந்து வருமானம் கிடைக்காது என்று சொன்னால் சரியல்ல. நிலங்களில் மூழ்கிவிட்டபிறகு அரசாங்கத்தால் நஷ்டஈடு ஏதேனும் வாங்கியுள்ளேனா என்றால் நஷ்டஈடு எதுவும் நான் வாங்கவில்லை. நான் பயிர் வைத்து அறுவடை செய்தேன். நான் ஊரில் இல்லாததால் நஷ்டம் எப்போது வந்தது என்ற விவரம் தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. வன்னிவேடு கிராமத்தில் அரசாங்கத்தால் என் அம்மா லட்சுமியம்மாளுக்கு வீட்டு மனை பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் வேறொருவர் பெயரில் பட்டா கொடுத்துள்ளார்கள் அவர் சித்தூரை சேர்ந்தவர். என் மனைவி பேரில் உள்ள வீட்டிற்கு பக்கத்து வீட்டில் உள்ளார், அவர் பெயர் எனக்கு தெரியாது. எனக்கு வன்னிவேட்டில் வீடு எதுவும் கிடையாது . அந்த மனை லட்சுமியம்மாள் பெயரில் உள்ளது என்றும் நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் 2 தடவை 1976 மற்றும் 1980ல் லோன் வாங்கினேன். என் தம்பி பிரதிவாதி லோன் வாங்கியது பற்றி எனக்கு தெரியாது. அதற்கு ஆதாரம் உள்ளது ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை தேவைப்பட்டால் அதனை ஆஜர் செய்கிறேன். ஆதாரத்தை தாக்கல் செய்தால் தான் நான் லோன் வாங்கிய விவரம் தெரியவரும். நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் தாவாவில் சொல்லியுள்ள சங்கதிகளை மிகைப்படுத்தி சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் 2 வது பிரதிவாதியின் மனைவி டெல்லியம்மாள் பெயர் உள்ளது என்று சொன்னால் நானும், என் அம்மாவும் முதல் பிரதிவாதி என் தம்பி பெயரில் வாங்கிய சொத்தை அவரின் மனைவிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிவிட்டார் அதனால் என் தம்பியின் மனைவி பெயரை வழக்கில் சேர்த்துள்ளோம். திருத்தப்பட்ட பிராதில் மேற்கண்ட விவரங்களை சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் சட்டப்படியாக 2 வது பிரதிவாதி சேர்க்கப்படாததால் அவரை நீக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பொய்யான சங்கதிளை போட்டு நான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பரிகாரம் பெறதகுதி அற்றவர் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை– இல்லை.